செய்தி வெளியீடு எண்–92 நாள்–28.1.2010

# மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் சென்னை நதிகள் மறுசீரமைப்பு அறக்கட்டளையின் உயர்மட்ட குழுவின் முதல் கூட்டம் நடைபெற்றது

* * * * * * **

மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் இன்று (28.1.2010) தலைமைச் செயலகத்தில், சென்னை நதிகள் மறுசீரமைப்பு அறக்கட்டளையின் உயர்மட்ட குழுவின் முதல் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சென்னை நதிகள் மறுசீரமைப்பு அறக்கட்டளையின் உயர்மட்டக் குழுவின் ஆய்வு எல்லைகளாக அரசு அறிவித்துள்ள பொருட்கள் குறித்து விரிவான ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது. சென்னையில் உள்ள நதிகள் மற்றும் நீர்நிலைகளை மறுசீரமைப்பதற்கான திட்ட செயல்பாடுகள், சுற்றுச் சூழல் மற்றும் அரசின் பல்வேறுத் துறைகள் மற்றும் அமைப்புகளின் பணிகளை ஒருக்கிணைத்து செயல்படுத்துதல் போன்ற பல்வேறு பொருள்கள் குறித்து இக்கூட்டத்தில் விரிவாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இந்த ஆய்வு கூட்டத்தில் மாண்புமிகு குடிசை மாற்றுத்துறை அமைச்சர் திரு. சுப. தங்கவேலன், மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு.டி.பி.எம்.மைதீன்கான், தலைமைச் செயலாளர் திரு.கே.எஸ். ஸ்ரீபதி,

மாசுகட்டுப்பாட்டு வாரியத் தலைவர் திரு.ஆர்.பாலகிருஷ்ணன், வனத்துறை செயலாளர் திரு.தேபேந்திரநாத் சாரங்கி, நிதித்துறை முதன்மைச் செயலாளர் திரு.கு.ஞனதேசிகன், பொதுப்பணித்துறை முதன்மைச் செயலாளர் திரு.எஸ். ராமசுந்தரம், துணை முதலமைச்சரின் செயலாளர் திரு. கே. தீனபந்து, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைச் செயலாளர் திரு. நிரஞ்சன் மார்டி, வருவாய்த்துறை செயலாளர் திரு.தனவேலு, சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் உறுப்பினர் செயலர் திரு. விக்ரம் கபூர், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித்துறைச் செயலாளர் திரு. அசோக் டோங்ரே, சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் வாரிய நிர்வாக இயக்குநர் திரு. சிவதாஸ் மீனா, சென்னை மாநகராட்சி இணை ஆணையர் திரு.ஆஷிஷ் சாட்டர்ஜி, சென்னை மாநகர வளர்ச்சிக் குழுமத்தின் முதன்மைச் செயல் அலுவலர் திரு.கண்ணுசாமி, கூவம் நதி நிர்வாக பொறியாளர் திரு.காந்திமதிநாதன் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * * * * * *

வெளியீடு–இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயகலம், சென்னை–9.